உ

சிவமயம்



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் சீரணி
நாகம்மாள் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# சுப்பிரமணியம் சிற்றம்பலம்



அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

17-11-2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அராலி தெற்கைப் பிறப்பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய்
சீரணி நாகம்மாள் கோவிலடியை வசிப்பிடமாகவும்

# அமரர் திரு.சுப்பிரமணியம் சிற்றம்பலம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

17-11-2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

திதி ஒன்று எரிந்தது, ஒளி தந்து மறைந்தது
பூ ஒன்று உதிர்ந்தது காய், கனியாம் மலர்ந்தது
தந்தை என்ற உறவே,
தலைவன் என்ற வழி விளக்கே
சாம்பரிலும் சாகாத பசுமை நார் எமக்கு
கடலில் கரைத்தாலும் கரையுமா உறவு? எண்ண
அலைகளில் எப்போதும் எங்களப்பா!
ஏணியாக இருந்தீர் ஏற்றம் பல நாம் காண்டோம்
மலர் பறிக்க நினைத்தோம், முள் குத்தியது
கனலில் அணைந்து கடலில் கரைந்த
எங்கள் தெய்வம், தங்கள் பாதங்களில்
கண்ணீர் காணிக்கையாய்
இம்மலர் சமர்ப்பணம்

**இங்ஙனம்**
**- குடும்பத்தினர் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்"



மண்ணில்
07-07-1945

விண்ணில்
18-10-2010

அமரர்

# திரு.சுப்பிரமணியம் சிற்றம்பலம்

அவர்கள்

ஆண்டு விகிர்தி ஐப்பசியது திங்கள் நீண்ட நிலாத்
வளர்பிறையாம் ஏகாதசித் திதியதனில் தாண்டவன்
தாள் விரும்பித் தகவுடையார் சிற்றம்பலம்
சென்றடைந்த நாள் விரதக் ஐப்பசி சேர் ஏகாதசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

விநாயகர் துதி

உச்சியின் மகுடம் மின்ன ஒளிதரு நுதலினோடை
வச்சிர மருப்பின் ஒற்றை மணி கொள் கிம்புரி வயங்க
மெய்ச் செவி கவரி தூங்க வேழமாமுகம் கொண்டுற்ற
கச்சியின் விகட சக்கர கணபதிக்கு அன்பு செய்குவாம்.

## பஞ்ச புராணம்

### தேவாரம்

ஆடினாய் நறு நெய்யோடு பால் தயிர்
அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடினாய் இடமாநறுங் கொன்றை நயந்தவனே
பாடினாய் மறையோடு பல் கீதமும்
பஞ் சடைப்பணி கால் கதிர் வெண்திங்கள்
சூடினாய் அருளாய் அருங்க எம் தொல்வினையே.

### திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை
நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த
அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுது அருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத்
திரை லோக்கிய சுந்தரனே

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கண்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
ஈசற்(கு) ஆட் செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள் அளவிலாததோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

கரும்பு முரல் கடிமலர்ப் பூங்குழல் போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால் சுரந்த கலசம் போற்றி
இரும்பு மனம் குழைந்து என்னை எடுத்தாண்ட
அங்கயற் கண் எம்பிராட்டி
அரும்பும் இள நகை போற்றி ஆரண தூ
புரம் சிலம்பும் அடிகள் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபின காளி தானாட அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட்
அறுகு பூத வேதாளம் அவையாட
மதுர வாணி தானாட மலரில் வேதனாராட
மருவு வானு லோர் ஆட மதியாட
வசன மாமி யாராட நெடிய மாம னாராட
மயிலு மாடி நீயாடி - வரவேணும்

கதை விடாத தோள்வீம எனதிர் கொள் வாலி யால் நீடு
கருத வார்கள் மாசேனை - பொடியாகக்
கதறு காலி பொய் மீள விஜய னேறு தேர் மீது
கனக வேத கோடூதி - அலை மோதும்
உததி மீதி வேசாயு மூலகி மூடு சீர்பாத
உவன வூர்தி மாயோ - மருகோனே
உதய தாம மார்பார்பி ரபுட தேவ மாராஜன்
உளமு மாட வாழ்தேவர் - பெருமாளே

## அபிராமி அந்தாதி

தனம் தரும் கல்வி தரும் ஒரு
நாளும் தளர்வு அறியா
மனம் தரும் தெய்வ வடிவும்
தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம்
தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக் கண்களே

## வாழ்த்து

வைய நீடுக மாமழை மன்னுக
மெய்வி நம்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தனமுந் தோங்குக
தெய்வ வெண் திரு நீறு சிறக்கவே
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சுப்பிரமணியம் சிற்றம்பலம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்துமாகடலின் நித்திலம் என வர்ணிக்கப்படும் இலங்காபுரிக்குச் சிரசாக விளங்குவது யாழ்ப்பாணம். அந்த யாழ்ப்பாணத்தின் தென்மேற்குப் பகுதியில் அமைந்திருப்பது அராலிக் கிராமம் ஆகும். பல ஆலயங்களும் பல்வேறு வளங்களும் சிறப்புக்களும் அமைந்த அராலி கடலாலும் செந்நெல்வயல்களாலும். சூழப்பட்ட அழகான கிராமமாகும். விருந்தோம்பலும் பாரம்பரிய கலை கலாச்சாரங்களிலும் மிக மிளிர்ந்து நலம்பல ஓங்கும் பழமையும் புதுமையும் நிறைந்த கிராமம் அராலிக் கிராமமாகும்.

இந்த ஊரிலே சைவ வேளாளர் பரம்பரையில் உதித்த சுப்பிரமணியம் தையல்நாயகம் தம்பதிகளுக்கு புத்திரனாக 1945ம் ஆண்டு ஆடி மாதம் 07ம் திகதி (07-07-1945) அமரர் சுப்பிரமணியம் சிற்றம்பலம் அவதரித்தார்.

இவ்வாறு இந்நிலம் வந்தவர் தன் உடன் பிறப்புக்களாக உற்ற சரஸ்வதி, சிவபாக்கியம் என்னும் இரு சகோதரிகளையும், அன்பு மிகு பொங்கி ஆசையுடன் விளையாட பரமசிவம், பொன்னம்பலம், குமாரசாமி, மார்க்கண்டு என்னும் சகோதரர்களையும் கண்டு அக மகிழ்ந்தார். இவ்வளவில் "ஆசையுடன் ஆடியது போதும் மகனே அன்புடனே பள்ளி செல்ல வேண்டும் மகனே"

என்ற பெற்றோரின் அறிவுரை கேட்டும் அவர்களின் வழிகாட்டுதலில் தனது கல்வியை வடக்கு அராலி இந்துக் கல்லூரியில் பயின்றார். எனினும் இவர் தனது குடும்பத்தின் நிலையால் பாடசாலை வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டி ஏற்பட்டது. இளைய வயதிலேயே தொழில் தேடிச் சென்றார். அப்பொழுது இவருக்கு கட்டிட நிர்மாணப் பணிகளில் தொழில் கிடைத்து "செய்யும் தொழிலே தெய்வம்" என்பதற்கிணங்க அத்தொழிலில் மிகுந்த ஈடுபாட்டுடனும் சிறப்புடனும் செயற்பட்டார்.

எனினும் முத்துக்கு விலை பேசும் உலகத்திற்கு சிப்பி பட்டபாடுகளின் துயரம் தெரியுமா? தனது தந்தையை இழந்தமையால் சகோதர சகோதரிகளை காக்க வேண்டிய பொறுப்பாலும் திரைகடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடியும் திரவியம் ஈட்ட வேண்டும் என்ற ஆசையில் ஈராக் நாடு சென்று சிலகாலம் கடுமையாக உழைத்தார். பின்னர் அங்கிருந்து இவர் தனது தாய் நாட்டுக்கு திரும்பினார். தாய் நாட்டுக்கு திரும்பிய இவருக்கு பெரியோர்கள் இல்லற வாழ்க்கை அமைக்க வேண்டி சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் கோவிலடியைச் சேர்ந்த இராசரத்தினம் நாகம்மா தம்பதிகளின் இனிய மகளாகிய சந்திரலீலாவை இல்லத்தரசியாக்கினர். இதன் பயனாக தனது மனைவியின் சகோதரர்களான மங்களேஸ்வரி(அமரர்) ஜெயமங்களம், மகேஸ்வரி, தேவமலர், இரத்தினபாலன் (அமரர்), நாகேஸ்வரி, ராஜேஸ்வரி (அமரர்) விக்கினேஸ்வரி (அமரர்) ஆகியோரைத் தனது மைந்துனர்களாக வாய்க்கப் பெற்றார்.

திருமணத்தோடு இவரின் வாழ்வு ஒரு புது அத்தியாயமாக மலர்ந்தது.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

எனும் வள்ளுவர் வாக்கிற்கு அமைய இல்லற வாழ்வில் ஈடுபட்டார்கள். சம்சார சாகரபந்தத்தில் ஏற்ற இறக்கம் இன்ப துன்பங்கள் என்பது மாறாநியதிகள் இவைகளை எல்லாம் எதிர்நீச்சல் போடுகின்ற மனிதருக்கு இல்லச் சுமையும் சுவையாகத் தானிருக்கும். நிழலுக்குப் பயந்தால் நிம்மதி போகும் நெஞ்சுரத்தோடு இல்லறப் பயணத்தை மேற்கொண்ட சிற்றம்பலம் சந்திரலீலா தம்பதியரின் இல்லறத்தின் பயனாக

"மங்கலம் என்ப மனைமாட்சியமற்று அதன்
நன்கலம் நன் மக்கட்பேறு"

என்பதற்கிணங்க சிறிசங்கர், சிவச்சந்திரன் ஆகியோரைத் தமது பிள்ளைகளாகப் பெற்றெடுத்தனர்.

தனது இரு புத்திரர்களையும் தனது இரண்டு கண்களாகக் கருதிப் பாசத்துடன் வளர்த்தார். தனது குடும்பத்தை காப்பதற்காக சவுதி நாட்டுக்கு சென்று தொழில் செய்தார். அங்கே சில காலம் தங்கிய இவருக்கு குடும்ப பாசமும் தாய்நாட்டின் பாசமும் தலை தூக்கியது. மீண்டும் தாயகத்திற்கு வந்தார். இங்கு வந்த இவர் மீண்டும் ஆலய சிற்ப கட்டிட வேலைகளில் ஈடுபட்டார். இவர் ஒரு சிறந்த சிற்பக் கலைஞர் ஆவார். இவரின் சிற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகளை பல ஆலயங்களில் காணலாம். சீரணி நாகம்மாள் கோவில், காரைநகர் சிவன் கோவில், இணுவில் கந்தசுவாமி கோவில் என்பன இவற்றுள் சிலவாகும்.

இவரின் சிற்ப வேலைகளுக்கு கிடைத்த பெரும் கௌரவமாக "ஈழத்துச் சிதம்பரம்" என அழைக்கப்படுகின்ற காரைநகர் சிவன் கோவிலில் இவருக்கு பொன்னடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். பின்னர் இணுவில் கந்தசுவாமி ஆலயத்தின் தட்விணத்வார (தெற்கு வாசல்) இராஜகோபுர நிர்மாணத்தைச் சிறப்புற நிறைவேற்றியமையைப் பாராட்டி 2004ம் ஆண்டு தை மாதம் 22ம் திகதி (22-01-2004) நடைபெற்ற பஞ்சகுண்டபக்ஷ மஹாகும்பாபிஷேக வைபவத்தின் போது "கோபுர காலவித்தகர்" என்னும் சிறப்பு விருதை ஆலய தர்ம கர்த்தா சபையும் உபயகாரர்களும் வழங்கி கௌரவித்தனர்.

இவர் தனது வாழ்நாளில் ஆலயங்களை தரிசிப்பதில் மிகவும் அக்கறையாக இருந்தார். அராலியில் இருந்த போது அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மனையும் சண்டிலிப்பாயில் அருள்மிகு சீரணி நாகம்மாளையும் முக்கியமாக வணங்கினார். கால ஓட்டத்தில் முதல் மகன் சிறிசங்கர் தொழில் தேடி இத்தாலி சென்றார். சிறிது காலத்தின் பின் இளைய மகன் சிவச்சந்திரனும் தொழில் தேடி குவைத் சென்றார். மகன்களின் பிரிவினால் சிறிது கவலை அடைந்தாலும் மகன்களின் வளர்ச்சி கண்டு பெருமிதமடைந்தார். எனினும் சிறிது காலத்தின் பின்னர் இளைய மகன் சிவச்சந்திரன் தாய் நாட்டுக்கு திரும்பி வந்தார்.

கள்ளங்கபட மற்ற வெள்ளை மனமும், எவர் மனமும் நோகாது கறை படாத சொற்களால் நிறைபடக் கூறும் நிறை மனத்தார். தம் இல்லம் நாடி வந்தோருக்கு இன்முகம் காட்டி இன்சொல் கூறி இரு கரம் நீட்டி நிறைந்த மனத்துடன் வரவேற்கும் நற்குணத்தவர். வந்த விருந்தாளிகள் முகம் மலர்வதைக் கண்டு அகமகிழ்பவர். இல்லையென்று தன்னிடம் வருவோருக்கு தன்னால் இயன்ற உதவிகளை மனம் கோணாது செய்பவர் உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசா பெரியவர் தம் செயலால் சொல்லால் பிறர் மனதில் என்றும் மங்காத இடம்பிடித்தவர்.

தீடிரென நோய்வாய்ப்பட்ட இவரை வைத்தியசாலைக்கு கூட்டிக் கொண்டு சென்றோம். ஆனால் அங்கு இவர் அமரராவார் என்ற சோகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியை எவருமே எதிர்பார்க்கவில்லை. அவர் 2010ம் ஆண்டு ஐப்பசி மாதம் 18ம் திகதி திங்கட்கிழமை அவிட்ட நட்சத்திரமும் பூர்வபக்க ஏகாதாசி திதியில் காலை 7.40 மணியளவில் எம் எல்லோரையும் இப்பூவுலகையும் விட்டு அம்பாளின் திருப்பாதங்களைச் சென்றடைந்தார். ஆண்டவன் படைப்பிலே பல அற்புதப்பிறவிகளும், தோன்றி மறைகின்றன. அவர்களுள் இவரும் ஒருவர் ஆவார் அன்பருக்கு அன்பராய் அடியார்க்கு அடியாராய், வாழ்வாங்கு வாழ்ந்து ஒளி இழந்து மறைந்து போன சிவனை சிந்திக்க சிந்தை கலங்கும்.

"வாழ்க்கை என்பது மனிதன் வாழும் விதத்திலே தான் நிறைந்து உள்ளது." தன்னலம் அற்ற வாழ்வு சீர்பெற்ற வாழ்வு அதுவே தூய வாழ்வும் ஆகும்.

"வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.

என்பது வள்ளுவர் வாக்கு இக்குறள் பொய்யா வண்ணம் நாம் நல்வழிகாட்டி தெய்வத்துள் அடைந்து விட்டார்.

"மண் ஆண்டது போதும் என்று விண் ஆளச் சென்றாரோ?
"குடம்பை தனித் தொழியப் புட் பறந்தறதே உடம்போடு
உயிரிடை நட்பு"

என்னும் வள்ளுவர் வாக்கை மனதிற் கொண்டு சாந்தி பெறுவோமாக!!!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

கண்ணவன் கணவனென்று
கைப்பிடித்த நாள் முதலாய் எனைக்
கண் கலங்க வைக்கவில்லை – இன்று
கைம் பெண்ணாய் கலங்க விட்டு போனதெங்கே
கண்ணொத்த மழலைச் செல்வங்களைப்
பெற்று வளர்த்தோமே
எனைத் தனியே தவிக்கவிட்டு
விண்ணுலகம் சென்றீரோ
குமறி அழ வைத்தாய் கொடுமை அப்பா – இனிய
உன் முகத்தை இனி காண்பதெப்போ

## பிள்ளைகள் புலம்பல்

கண்ணை இமை காப்பது போல காத்து பாலூட்டி
உணவூட்டி பக்குவமாய் உடுப்புக்கட்டி
சீராட்டி கல்வி கற்க வைத்த அப்பா
நோய் என்று சொல்லிப் பாயில் படுக்காமல்
போய் வருகிறேன் என்று கூடச்
சொல்லமல் கொள்ளாமல்
நீண்ட பயணமது சென்று
மீளாத் துயில் கொண்டீரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பி புலம்பல்

என் பாசமிகு அண்ணாவே! எங்களை
எல்லாம் தவிக்க விட்டு எங்கு சென்றீரோ!
பாசத்தின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
அன்புத் தோழனாய் விளங்கினீரே!
இப்படியோர் உறவை இனிப் பெற
நாங்கள் எங்கு செல்வோம்!
என்ன தேவை என்று சொன்னவுடனும்
அத்தனையும் கேட்டு தந்து அரவணைப்பீரே!
என் மனைவியும் பிள்ளைகளும் பெரியப்பா பெரியப்பா"
என்று அலறிய போது ஏன் அண்ணா
படுத்து உறங்கினீரோ உன் உயிரை காலன் பறித்து விட்டானோ
பாசமுள்ள எங்கள் உறவு எம்மை விட்டு
பிரிந்ததென எண்ணும் போது எம்மை விட்டு
பிரிந்ததென எண்ணும் போது எம் இதயம்
வெடித்து விடும் போல இருக்கிறது.
இப்படியான அன்புள்ளம் கொண்ட உறவை
இனிமேல் எங்கு பெறமுடியுமோ!
உங்களின் அன்பு கலந்த பாசத்திற்கு
எங்களின் கண்ணீரை காணிக்கையாக்கி
உங்கள் ஆத்மா சாந்தியடையே
ஆண்டவன் பிரார்த்திப்போமாக!

**சு.மார்க்கண்டு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மச்சாள்மார் புலம்பல்

அன்பு மழை பொழிய ஆசையுடன்
இவ்வுலகில் வந்ததித்த எம இனிய அத்தானே
பாசமெனும் மழை பொழிந்து பாரினில்
நாம் வாழ வழி வகுத்தீரே ஆனால்
ஆறாகப் பெருகி வருகின்ற கண்ணீரை அடக்கமுடியவில்லை
கருணை உள்ளம் கொண்ட மனமும்
அனைவரோடும் பேசிப் பழகுகின்ற உள்ளமும்
எங்கே போனதென்று தெரியவில்லையே அத்தானே
உங்கள் உயிரை காலன்
கொண்டு சென்றதன் காரணமென்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை

வெண்டாமரைக் கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
சகம் ஏழும் அளித்து
உண்டானுறங்க வொழித்தான் பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகலகலா வல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற்கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே!
சகலகலா வல்லியே

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங் கொலோ
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகலகலா வல்லியே.

தூக்கும் பனுவற்றுறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித் தருள்வாய்
வட நூற்கடலும்
தேக்கும் செழுந் தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே!
சகலகலா வல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நேடுந் தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன்
செந்நாவு ம் அகமும் வெள்ளைக்
கஞ்சத்தவி சொத் திருந்தாய்
சகலகலா வல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்த நல்காய்
எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகலகலா வல்லியே!

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்காய்
உளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகலகலா வல்லியே!

சொல்விற் பனமும் அவதானமும்
கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்தடிமை கொள்வாய்
நளினாசனஞ் சேர்
செல்விக்கு கரிதென் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே!
சகலகலா வல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு
அரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே!
சகலகலா வல்லியே!

மண் கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண் கண்ட ளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண் கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ?
சகலகலா வல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

1) ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டெயும் வாள்தடங்கண் மாதே
வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய்

2) பாசம் பரஞ் சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்கு
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பர்யாம் ஆடேலோ ரெம்பாவாய்.

3) முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரேழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துங் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்  பழஅடியீர் பாங்குடையீர்
புத்த டியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
ஏத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.

4) ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப் பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உன்னெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயே வந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) மாலறியா நான் முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான
கோலமும் நம்மை ஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

6) மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்கும் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.

7) அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ் சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய் திறப்பாய்
தென்னா என் னாமுன்னம் தீசேர் மெழு கெப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன் நெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

8) கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ் சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப் பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமே வாய்திறவாய்
ஆழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறே
ஊழி முதல் வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலே ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9) முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்
உன்னடியார் தாழ் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலாமேலோ ரெம்பாவாய்.

10)பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேத முதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன் தன் கோயிற் பிணாப்பிள்ளை கான்
ஏதவனூர் ஏதன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

11)மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துங் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்தோங்காண் ஆரழல் போற்
செய்யா வெண் ணீறாடி செல்வா சிறு மருங்குல்
மையார் தடங்கன் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்.

12)ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இல் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல் மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13)பைங்குவளைக் கார் மலரால் செங்கமலப் பொற்பாதம்
அங்கங் குருகினத்தால் மின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்க
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோ ரெம்பாவாய்.

14)காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத்தார் பாடி
ஆதி திறம் பாடி அந்தமா மாபாடி
பேதித்து நம்மை வளத்தெடுத்த பெய்வளை தன்
பாதத் திறம்பாடி ஆடெலோ ரெம்பாவாய்.

15)ஓரொருக்கால் எம்பெருமான் என்னென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களி கூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொரகால் வந்தனையால் விண்ணோரை தான் பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தான்
வாருருவப் பூண் முலையீர் வாயார நாம் பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்த் தாடேலோ ரெம்பாவாய்

16)முன்னிக் கடலைச் சுருக்கியெழுந்துடையான்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடி மேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்ன பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17)செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள் பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலகா
கொங்குண் கருங்குழலி நந்தெம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

18)அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற் போல்
கண்ணார் இரவி கதிர் வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமாய் நின்றான் கழல் பாடிப்
பெண்ணே இப் பூம் புனல் பாய்த் தாடேலோ ரெம்பாவாய்.

19)உன் கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்கப் பழஞ்சொற் புதுங்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப் போங்கேள்
எங்கொங்கை நின்னைபர் அல்லார் தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக் கெங்கோன் நல்குதியேல்
எங் கெழிலேன் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்

20)போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி எல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லாவுயிர்க்கும் ஈறாம் இணை அடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்த சஷ்டி கவசம்

காப்பு

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.

குறள் வெண்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மைய நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென்றுவந்து
வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடையழகும் இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல்முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின் கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத்தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனை வரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பார்வையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தான்எனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட்டோடப்
படியினியில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால் கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்க
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடு விடு வேலை வெருண்டதுவோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படத்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் கூடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவனீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திடவருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசாரத்துடன் அங்கத் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றா ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
வழியாற் காண வெருண்டிடும் பேய்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா தவரைப் பொடிபொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரஹணபவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரணி நாகேஸ்வரி திருவூஞ்சல்

சீரோங்கும் மூலமெனும் தேவதேவா
சிவசக்தி தந்தவனே செல்வ மூர்த்தி
பாரோங்கு கலை சுரங்கும் பரமநாதா
பத்தர்தமக் கருள் சுரக்கும் வேத கீதா
தேரோங்கு சண்டிலிப்பாய்ச் சீரணித்தாய்
ஸ்ரீ நாகபூஷணிதன் னூஞ்சல்பாட
காரோங்கு கஜமுக ஐங்கரங்கள் கொண்ட
கணபதியே நின் பதங்கள் காப்பதாமே.

திருமருவு சைவநெறி சிறக்க வந்த
செல்வியே சிவன்பாகம் சேரும் தாயே
தருமநெறி யடியார்கள் தவத்திற் பேணும்
சங்கரியே அண்டமெலாம் தந்த தாயே
திருமுறையும் செந்தமிழும் சேர்ந்த பண்பில்
திருத்தமுற ஆக்கிய பொன்னூஞ்சல் மேவி
திருமகள்வாழ் சீரணியூர் திகழும் தாயே
செல்வ நாகேஸ்வரியே ஆடீரூஞ்சல். 01

அருட்பொதிகை கைலைமலை தூண்களாக
ஆனந்த சோதிமலை விட்டமாக
விருப்புடைய நான்மறைகள் வடங்களாக
மேவுசிவ ஆகமங்கள் பீடமாக
அருப்பு மலர் மண்டலங்கள் ஆரமாக
அமைந்த பொன்னூஞ்சலிலே அமர்ந்திருக்கும்
திருப்பொலிவாய்ச் சீரணியூர்திகழும் தாயே
செல்வ நாகேஸ்வரியே யாடீரூஞ்சல். 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரதரும் தும்புருவும் நாதம் மீட்ட
நண்ணுபதஞ் சலிபுலியும் தாளம் தீட்ட
சூரியனும் சந்திரனும் தூபம் மூட்ட
தோகையர்க ளிருபுறமும் தீபன் காட்ட
வேரிமல ரயன் வேத விதி நடாத்த,
வேணுகோபாலன் மணி மாலை சாத்த
சேருமெழிற் சீரணியூர் திகழும் தாயே
செல்வ நாகேஸ்வரியே யாடீரூஞ்சல். 03

அம்பலத்தில் அப்பனரு கமர்ந்திருக்க
அரவினங்கள் மருவுநிழற் குடைபிடிக்க
செம்பதுமத் திருக்கரத்தால் சிவனார் பூசை
செய்தெம்மை யாண்டருளும் தேவியாகிக்
கும்பமுனி நந்திதவ முனிவர்வேண்ட
குரு ஞான அருளமுதல் கொடுத்தாயம்மா
செம்புனல்சேர் சீரணியூர் திகழும் தாயே
செல்வ நாகேஸ்வரியே ஆடீரூஞ்சல். 04

புகழுடைய முடியாட சடைகளாட
பொற்தோடு மாலைகளும் பொருந்தியாட
முகமதிலி ரத்தினமூக் குத்தியாட
முண்டகப் பொற்பாத தண்டையாட
தகவுடைய சதுர்க்கரமும் தாளுமாட
தாங்குமணித் தாமரையும் விடையுமாட
செகமேந்து தலையாதி சேடனாட
செல்வ நாகேஸ்வரியே ஆடீரூஞ்சல். 05

ஓங்குபல அண்டங்கள் அதிர ஆட
ஓங்கார முகன் குமரன் அருகிலாட
பாங்கான மாயவனும் சங்குமாட
பண்ணவரும் இந்திரனும் பரவியாட
நீங்காத நஞ்சுண்ட நிமலனாட
நெடியதிசை யதிபரொடு படைகளாட
தேங்காவின் சீரணியூர் திகழும் தாயே
செல்வ நாகேஸ்வரியே ஆடீரூஞ்சல். 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெம்பிணிகள் தீர்த்தடியார் விரும்பும் பேறு
வேண்டிய வாறுதவுமொரு விமலியாகி
சம்பந்தராதிபல குரவர்தம்மைத்
தந்தெம்மை வளர்ப்பவளே தழுவுதில்லை
அம்பலவ னுடலெல்லா மாகிநிற்பாய்
அற்புதமே அடியாருக் கமுதே தேனே
செம்பழனச் சீரணியூர் திகழுந்தாயே
செல்வ நாகேஸ்வரியே ஆடீரூஞ்சல். 07

தானமொடு தவநலங்கள் எங்கும் தங்க
தண்கலசம் குலிசமலர் கன்னல் கொண்டாய்
பானல்மர கதமேனிப் படிவத்தாளே
பஞ்ச கிருத்தியம் புரியும் பண்புகொண்டாய்
ஈனதிசை யணுகாமல் எம்மைக் காக்கும்
ஈஸ்வரியே உணவூட்டி இரட்சிப்பாளே
தேனளிவாழ் சீரணியூர் திகழுந்தாயே
செல்வ நாகேஸ்வரியே ஆடீரூஞ்சல். 08

பூரணியே பார்வதியே புனித கஞ்சப்
பூமகளே சிற்பரையே பொன்னே வேத
காரணியே கற்பகமே கரும்பே ஆகிக்
கலையுருவே கனிரசமே கருணைசெய்யும்
நாரணியே நமசிவய நடனத்தாளே
நாகமணி நாயகியே நாதரூபி
சீரணியும் சீரணியூர் திகழும் தாயே
செல்வ நாகேஸ்வரியே ஆடீரூஞ்சல். 09

ஐங்கரனைத் தந்தவளே ஆடீரூஞ்சல்
அறுமுகனை அணைத்தவளே ஆடீரூஞ்சல்
சங்கரனின் பங்கினயே ஆடீரூஞ்சல்
தவமிகுந்த தயாபரியே ஆடீரூஞ்சல்
கங்கையிலே வந்தவளே ஆடீரூஞ்சல்
கண்ணனது சோதரியே ஆடீரூஞ்சல்
நங்கவலை தீர்த்தவளே ஆடீரூஞ்சல்
நாகபூஷணித்தாயே ஆடீரூஞ்சல் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாழி

கனம்பூத்த கலையமுதும் தமிழும் வாழி
கதிர் நெல்லும் பசுவினமும் மழையும் வாழி
தனம்பூத்த செழுமை நலம் தழைத்து வாழி
தவம் பூத்த சைவமத தர்மம் வாழி
மனம் பூத்த அடியார்கள் மகிழ்ந்துவாழி
மண்ணுமறை ஆகம புராணம் வாழி
தினம் பூத்த கொன்றை முடிச்சிவனும் வாழி
சீரணி நாகேஸ்வரியும் வாழி வாழி.

ஓம்

## சண்டிலிப்பாய் சீரணி அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பிகை தோத்திரப்பாமாலை

### துதி

வாரணனைப் பெற்றவளே மன்னுபுகழ்ச் சண்டிருப்பாய்ச்
சீரணிவாழ் நாகராசேஸ்வரியே ஆரணங்கள்
தந்தவளே நின்பாதம் தண்தமிழாற் பாடுதற்குச்
சுந்தரியே நீயே துணை.

### காப்பு

தேர்மேவு சண்டிலிப்பாய்ச் சீரணியில் வந்தமர்ந்த
சீர்நாக பூஷணியின் சேவடியில் – பேர்மேவு
தோத்திரப்பாமாலை தொடுக்கக் கணபதியே
காத்தருள்வாய் நின்றென் கருத்து

### மாலை

பேராரும் பிரணவத்தின் பிழம்பே ஞானப்
பெருஞ்சுடரே அருந்தவத்தோர் பேணும்தாயே
நீராரும் சடைமருவு நிமலன் பாகம்
நீங்காத அம்பிகையே நீணிலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராரும் கணபதியை, பொறிவேலேந்தும்
புத்திரனைப் பெற்றவளே பொன்னே செல்வச்
சீராடும் சண்டிருப்பாய்ச் சீரணித்தாய்
ஸ்ரீ நாகபூஷணியே போற்றி போற்றி 01

கல்விநலம் சுரந்தருளும் கனியே, பாகே
கற்றவர்கள் கருத்தினிக்கும் கரும்பே, பொங்கும்
பல்வளமும் பலஉலகும் படைத்துக் காக்கும்
பரஞ்சுடரே பரமனிடப் பாங்கினாளே
நல்வரமும் நன்னெறிசேர் ஞானப்பாலும்
நமக்களிக்கும் நாரணியே நலமிக்கோங்கும்
செல்வமிரு சண்டிலிப்பாய்ச் சீரணித்தாய்
ஸ்ரீ நாகபூஷணியே போற்றி போற்றி. 02

ஓதரிய கலைஞானம் உதவும்தாயே
உள்நெகிழும் அன்பர் மனத்துதிக்கும் தாயே
நாதமொடு விந்தான நாகத்தாயே
நம்பனுடனாடுகின்ற நடனத்தாயே
போதமொடு வீடருளும் புனிதத்தாயே
புவனமீ ரேழினையும் பூத்ததாயே
சீதமலி சண்டிருப்பாய்ச் சீரணித்தாய்
ஸ்ரீ நாகபூஷணியே போற்றி போற்றி. 03

ஒன்றுபல வடிவான உருவத்தாயே
ஓங்கார மந்திரமாய் ஒலிக்கும் தாயே
மன்றலூறு மலைமகயாய் வளர்ந்தாயே
மணிவண்ணன் தங்கையென வாழுந்தாயே
அன்று மகிஷாசுரனை அழித்ததாயே
அருண்முலைப்பால் சம்பந்தர்க்களித்ததாயே
தென்றல் தவழ் சண்டிலிப்பாய்ச் சீரணித்தாய்
ஸ்ரீ நாகபூஷணியே போற்றி போற்றி. 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரனுக் கருங்கனியை அருளும் தாயே
அறுமுகனைப் "பழம் நீ" என அணைத்ததாயே
கங்கைவர லிங்கமதை காத்ததாயே
காலொன்றால் காலனையும் கடிந்ததாயே
பங்கிரண்டு படிநெல்லைப் பகிர்ந்ததாயே
பாம்பினங்கள் தாலாட்டும் பச்சைத்தாயே
செங்கழனிச் சண்டிலிப்பாய்ச் சீரணித்தாய்
ஸ்ரீ நாகபூசணியே போற்றி போற்றி. 05

அருவான உருவான அழகுத்தாயே
அன்பர் மனக்கோயிலுள்ள அமருந்தாயே
கருவாகி உயிராகிக் கலந்ததாயே
கண்ணாகி மணியாகிக் காணும்தாயே
மண்எல்லாம் விண்ணெல்லாம் மருவும்தாயே
திருவாழும் சண்டிலிப்பாய்ச் சீரணித்தாய்
ஸ்ரீ நாகபூஷணியே போற்றி போற்றி. 06

நாவன்மை மதிவன்மை நல்கும்தாயே
நம்பினவர் மனமிருந்து நடத்தும்தாயே
சீவன்தன் துயரமெல்லாம் தீர்க்கும்தாயே
சித்தியொடு முத்திதரும் செல்வத்தாயே
மாவின்கீழ்ப் பாலனொடு மகிழுந்தாயே
மக்கண் மனை யுறவுநிதி வழங்கும்தாயே
தேவர்பணி சண்டிலிப்பாய்ச் சீரணித்தாய்
ஸ்ரீ நாகபூஷணியே போற்றி போற்றி. 07

சிந்தனையில் தித்திக்கும் சிறந்ததேனே
தேவர்களும் மூவர்களும் தெரியாத்தேனே
பந்தனையாம் வேரறுக்கும் பசியதேனே
பவப்பிணியை மாற்றவல்ல புதுமத்தேனே
வந்தனை செய்வார்வலைக்கு வாய்க்கும்தேனே
மனத்தொருகால் நினைத்தவரை வளர்க்கும்தேனே
செந்தமிழ்வாழ் சண்டிலிப்பாய்ச் சீரணித்தாய்
ஸ்ரீ நாகபூஷணியே போற்றி போற்றி. 08


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பிட்டுக் கேட்டதெல்லாம் கொடுக்கும் செல்வி
குமாரிஎன எங்குமுள குழந்தைச் செல்வி
செம்பட்டுத் துகில்வண்ணத் திலகச் செல்வி
திருக்கலசம் கரங்கொண்டு திகழும் செல்வி
நம்பற்குப் பங்கொத்த ஞானச் செல்வி
நமனூர் செல்லா தின்பம் நயக்கும் செல்வி
செம்பழனச் சண்டிருப்பாய்ச் சீரணித்தாய்
ஸ்ரீ நாகபூஷணியே போற்றி போற்றி. 09

ஊனாகி உயிராகி ஒளிர்வாய் போற்றி
உலகனைத்தும் பரந்திருக்கும் உமையே போற்றி
வானாதிபூதமென மலிந்தாய் போற்றி
வஞ்சகர் நெஞ்சணுகாத மணியே போற்றி
மீனாட்சியாய் விளங்கும் விளக்கே போற்றி
மெய்த்தவத்தோர் அருந்துகின்ற விருந்தே போற்றி
தேனூறும் சண்டிலிப்பாய்ச் சீரணித்தாய்
ஸ்ரீ நாகபூஷணியே போற்றி போற்றி 10

## பயன்
## கட்டளைக்கலித்துறை

தாகம் தவிர்த்திட நீர்தரும் வெம்பசிதான் தணிக்கும்
ஆகம் பொருந்திடு கல்வி சுகநிதி யானசிவ
போகம் தருமைந்தர் யோகந்தருமிந்த பூதலம்வாழ்
நாகம்பணி சீரணி மேவும் நாகம்மை நற்பதமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றென்றும் எங்கள்
## நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்.....

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்**
**உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு"**

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் விட்டுச் சென்ற எமது குடும்பத்தலைவர் அமரர் சுப்பிரமணியம் சிற்றம்பலம் அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஓடி வந்து துன்பம் பகிர்ந்து, பணஉதவி மற்றும் பல உதவிகள் செய்த உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் வெளிஊர்களிலும் வெளிநாடுகளிலும் இருந்து தொலைபேசியூடாகவும் ஏனைய வழிகளிலும் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் இறுதிக் கிரியையின் போது துண்டுப்பிரசுரம், மலர்வளையம், மலர்மாலை சாந்தி அனுதாபம் தெரிவித்தோருக்கும், மரணச்சடங்கு சிறப்புற நடைபெற உதவியோருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிற் கலந்து கொண்டோருக்கும் இன்று நடைபெறும் ஆத்ம சாந்தி வைபவத்தில் கலந்து கொண்டோருக்கும், அமரர் வைத்தியசாலையில் இருந்த போது அவருக்கு சிகிச்சையளித்த வைத்தியர்கள், தாதிமாருக்கும் இன்னும் எல்லா வழிகளிலும் எம்மோடு தோளோடு தோள் நின்ற அனைவருக்கும், மற்றும் இந்நூலைச் சிறப்புற அமைத்துத் தந்த "ஆர்.எஸ் பிறிண்டேர்ஸ்" நிறுவனத்திற்கும்


**எமது இதயம் நிறைந்த நன்றிகளைப் பணிவுடன்**
**தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**இங்ஙனம்**
**– குடும்பத்தினர் –**
சீரணி நாகம்மாள் கோவிலடி,
சண்டிலிப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம்சா வழி

மார்க்கண்டு
+
சந்திரவதனா
↓
பிரியதர்ஜினி
தர்ஷயா
தனுஷியா
தசிதா

இராசரத்தினம் + நாகம்மா

↓ சந்திரலீலா
↓ மகேஸ்வரி + சண்முகநாதன்
↓ தேவமலர் + ரவீந்திரன்
↓ இரத்தினபாலன் ❄
↓ நாகேஸ்வரி + செல்வரட்ணம்
↓ ராஜேஸ்வரி ❄ + புஸ்பநாதன்
↓ விக்னேஸ்வரி ❄

தேவமலர் + ரவீந்திரன்
↓
கிருஷ்ரி
கிருஷாந்தி

மகேஸ்வரி + சண்முகநாதன்

↓ ருஷானா + காங்கேயன்
↓
சாருகன்
சாகிதன்

↓ திலீபன் + ஜெயக்குமாரி
↓
~~திஷானி~~ திஷிரன்
திவ்யன்

↓ கெப்ஸிபா (நர்மினி)

நாகேஸ்வரி + செல்வரட்ணம்

↓ ராஜினி + சதீஸ்வரன்
↓
சஜீவன்
ரஜீவன்
ஆரோக்கியன்

↓ ராஜபாலன் + சோபனா
↓
சாரங்கி

↓ பகீரதி + மயூரதன்
↓
அகில்

ார்
ாம்
ன்
ன்
ந்திரன்

க் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்".



இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

ஆர்.எஸ் பிரின்டேர்ஸ், சண்டிலிப்பாய் தொ.பே: 021-2240313

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org